தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 43 | 4 Pages | 12.9.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 43 | 4 பக்கங்கள் | 12.9.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்**

**விளக்கம்:**
விரும்பிய பயன்களை விரும்பியவாறே அடைய முடியுமாகையால் செய்யத்தக்க தவம் இந்நிலையிலும் (இல்லற வாழ்க்கையிலும்) முயன்று செய்யப்படும்.

# கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த 5 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிதியுதவி

## முதல்அமைச்சர் அறிவிப்பு



சென்னை, செப். 12
முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:
சென்னை, எழும்பூர், நேருபூங்கா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 5 வாலிபர்கள், தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி பூண்டி மாதா கோவிலுக்கு சென்றுவிட்டு 8.9.2024 அன்று முற்பகல் திருச்சிசெங்கரையூர் கொள்ளிடம் ஆற்றுப் பாலத்தின் கிழக்குப் பகுதியில் குளிப்பதற்காக ஆற்றில் இறங்கியபோது, கிஷோர், கலைவேந்தன், ஆண்டோ, பிராங்கிளின், மனோகர், ஆகிய ஐந்து நபர்கள் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.
அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சௌகல்: அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்து 26 பேர் பலி



டகர், செப். 12
ஆப்பிரிக்காவில் இருந்து ஆண்டுதோறும் லட்சக்கணக்கானோர் ஐரோப்பாவுக்குள் அகதிகளாக நுழைகின்றனர். கடல் வழியாக ஆப்பிரிக்காவில் இருந்து ஐரோப்பாவுக்குள் நுழையும் முயற்சியில் பலர் தோல்வியடைந்து உயிரிழப்பு சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.
இதனிடையே, மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு செனகல். ஆப்பிரிக்காவின் பல்வேறு நாடுகளை சேர்ந்த அகதிகள் சிலர் செனகல் கடல் வழியாக படகில் ஐரோப்பாவுக்குள் செல்ல முயற்சித்தனர்.
இந்நிலையில், அகதிகள் சென்ற படகு கடந்த திங்கட்கிழமை கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 26 பேர் உயிரிழந்தனர். மேலும், படகில் பயணித்தவர்கள் எத்தனைபேர் என்ற விவரம் இதுவரை தெரியாததால் தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

## தமிழ்நாட்டு சித்த மருந்து ரத்தசோகையை குணமாக்கும் ஆராய்ச்சியில் தகவல்



புதுடெல்லி, செப். 12
ஆயுஷ்அமைச்சகத்தின் தேசிய சித்த மருத்துவ நிறுவனம் (என்.ஐ.எஸ்.) மற்றும் நாட்டின் புகழ்பெற்ற சித்த மருத்துவ நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள்குழு, தமிழ்நாடு சித்த மருந்து கலவையானஅன்னபேதி செந்தூரம், பாவனக் கடுக்காய்,மாதுளைமணப்பாகு,நெல்லிக்காய்லேகியம்ஆகியவற்றைக் கொண்ட 'ஏ.பி.என்.எம்.' மருந்து, ரத்த சோகை உள்ள வளரிளம் பருவத்துப் பெண்களுக்கு ஹீமோகுளோபின் மற்றும் அதனுடன்கூடிய சத்துக்களின் அளவை மேம்படுத்தும் என ஆராய்ச்சியில் கண்டறிந்து உள்ளனர்.ரத்தசோகையைகுறைப்பதில்சித்தமருந்துகளைபிரதானமாக பயன்படுத்தும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் 2 ஆயிரத்து 648 சிறுமிகள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.
ஆய்வு முடிவுகளின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் ஆர். மீனாகுமாரி கூறுகையில், "ஆயுஷ் அமைச்சகத்தின் பொது சுகாதார முயற்சிகளில் சித்த மருத்துவம் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. வளரிளம் பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, உணவு ஆலோசனை, நோய்த்தடுப்பு பராமரிப்பு மற்றும் சித்த மருந்துகள் மூலம் அளிக்கப்படும் சிகிச்சைகள் ரத்த சோகை நோயாளிகளுக்கு பலன்களை அளித்தன. எனவே ரத்த சோகைக்கான சித்த மருந்துகள் செலவு குறைந்த பங்கை பொது சுகாதாரத்துக்கு அளிக்கின்றன" என்றார்.

## வல்லபாய் படேல் சிலையில் விரிசலா..? சமூக வலைதளத்தில் பரவிய புகைப்படத்தால் பரபரப்பு



கிவாடியா, செப். 12
குஜராத் மாநிலம் நர்மதா மாவட்டத்தில் கிவாடியா என்ற இடத்தில் சர்தார்வல்லபாய்படேல்சிலைபிரமாண்டமாகநிறுவப்பட்டுஉள்ளது. இந்த சிலைக்கு ஒற்றுமைக்கான சிலை என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது. இந்த சிலை அந்தப் பகுதியின் முக்கிய சுற்றுலாத் தளமாக விளங்குகிறது. இந்நிலையில் சர்தார் வல்லபாய் படேல் சிலையில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும், அது எப்போது வேண்டுமானாலும் விழலாம் என்றும் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்த அடையாளம் தெரியாத நபர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.
முன்னதாக ஒரு எக்ஸ் வலைத்தள பக்கத்தில் கடந்த 8ந்தேதி இந்த பதிவு வெளியானது தெரியவந்தது. அதில் "ஒற்றுமை சிலையில் விரிசல் விழ ஆரம்பித்து இருப்பதாகவும், அது எப்போது வேண்டுமானாலும் கீழே விழலாம்" என்றும் கூறப்பட்டு இருந்தது. ஆனால் பிரச்சினை ஏற்பட்டதும் அந்த பதிவு நீக்கப்பட்டு இருக்கிறது. இதையடுத்து வழக்குப் பதிவு செய்த போலீசார், போலியான பதிவை வெளியிட்ட மர்மநபரை தேட ஆரம்பித்து உள்ளனர்.

## 15ந்தேதி அண்ணா பிறந்தநாள்: எடப்பாடி பழனிசாமி சென்னையில் மாலை அணிவிக்கிறார்



சென்னை, செப். 12
அ.தி,மு.க. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:
பேரறிஞர் அண்ணாவின் 116வது பிறந்த நாளான 15ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு சென்னை அண்ணாசாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா உருவச்சிலைக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.
நிகழ்ச்சியில், மாவட்டக்கழக செயலாளர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விடுதலை சிறுத்தைகள் கட்சி அ.தி.மு.க.வை அழைத்தது அவர்களின் தனிப்பட்ட விருப்பம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிருபர்களுக்கு பேட்டி



சிவகங்கை: செப். 12
சிவகங்கையில் முதல்அமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிருபர்களிடம் கூறியதாவது:
சிவகங்கை மாவட்டத்தில் நடந்து வரும் அரசு திட்டங்களை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.
ஆய்வுக்கூட்டத்தின் அறிக்கைகள் தயார் செய்யப்பட்ட பிறகு முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும்.
விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்தும் மது ஒழிப்பு மாநாட்டிற்கு அ.தி.மு.க.வை அழைத்து அவர்களின் தனிப்பட்ட விருப்பம்.
இவ்வாறு அவர் கூறினார்.

## S.P.பாரா மெடிக்கல் சயின்ஸ் கல்லூரியில் சிறுதானிய உணவு திருவிழா



அனந்தபுரம், செப். 12
S.P.பாரா மெடிக்கல் சயின்ஸ் கல்லூரியில் சிறுதானிய உணவு திருவிழா கொண்டாடப்பட்டது.
அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் சார்பாக சிறுதானியம் உணவு திருவிழா அனந்தபுரம் S.P.பாரா மெடிக்கல் சயின்ஸில் கொண்டாடப்பட்டது. அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் முன்னாள் தலைவர் விக்கிரவாண்டி தாலுகா நுகர்வோர் கண்காணிப்பு குழு உறுப்பினர் ஜேசு ஜூலியஸ் ராஜா தலைமை தாங்கினார். தாளாளர் பச்சையப்பன் முன்னிலை வகித்தார். அனைத்து மாணவிகளும் சிறுதானியத்தால் செய்யப்பட்ட உணவுப் பொருட்களை எடுத்து வந்து கண்காட்சிக்காக வைக்கப்பட்டது. சிறுதானியத்தை அனைவரும் தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு மாணவிகளுக்கு ஏற்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு ஆசிரியை ரேவதி மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்.

## மணம்பூண்டி ஊராட்சியில் தாயாமார்களுக்கு ஊட்டச்சத்துக் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



மணம்பூண்டி. செப் 12
மணம்பூண்டி ஊராட்சியில் தாயாமார்களுக்கு ஊட்டச்சத்துக் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணிகள் முகையூர் வட்டாரத்தில் செப்டம்பர் மாத ஊட்டச்சத்து மாத விழாவை முன்னிட்டு குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் அவர்கள் முன்னிலையில் மணம்பூண்டி ஊராட்சியில் உள்ள தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதன் ஒரு பகுதியாக தாய்மார்களுக்கு மரம் நடுதலை ஊக்குவிக்கும் பொருட்டு ஊராட்சி உள்ள தாய்மார்களுக்கு மற்றும் வட்டாரத்தில் உள்ள அனைத்து அங்கன்வாடி பணியாளர்களுக்கும் மணம்பூண்டி ஊராட்சியின் துணைத் தலைவர் பரமேஸ்வரி பூபதி சார்பில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இதில் அனைத்து தொகுதி மேற்பார்வையாளர்களும் மற்றும் தாய்மார்களும் கலந்து கொண்டுள்ளனர்.

## விழுப்புரம் வடக்கு மாவட்டம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சிறப்பு செயற்குழு கூட்டம்



விழுப்புரம், செப். 12
விழுப்புரம் வடக்கு மாவட்டம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சிறப்பு செயற்குழு கூட்டம் செஞ்சி ஜாபர் மினி ஹாலில் நடைபெற்றது கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் அ ஏ தனஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார் கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் ஆ ராசா ராமன்நாதிருநாவுக்கரசுகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் செஞ்சி நகர பொருளாளர் காமராஜ் வரவேற்றார் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கவிஞர் கி இளமாறன் ந செல்லதுரை ஆரணி நாடாளுமன்ற தொகுதி செயலாளர் சே நன்மாறன் மாநில துணை செயலாளர்கள் இனிய வளவன் துரை வளவன் மாவட்ட அமைப்பாளர் செஞ்சிஅரசுஒன்றிய பொருளாளர்கள் அ ஜான் குருமூர்த்தி வேல் பார்வேந்தன் ஒன்றிய துணை செயலாளர்கள் கோவிந்தன் வெங்கடேசன் குணபாலன்சீனு செஞ்சி நகரதுணை செயலாளர் தலித் மகிழ்வரசு அறிவர் அம்பேத்கர் போக்குவரத்து பேரவை நிர்வாகிகள் பொதுச் செயலாளர் வீர கணேசன் செஞ்சி பணிமனை ஐயப்பன் மாரி மேல்மலையனூர் ஒன்றிய துணை செயலாளர் ராசா ராமன் சுந்தரமூர்த்தி மகளிர் விடுதலை இயக்க ஒன்றிய செயலாளர்கள் அலமேலு ராஜேந்திரன் செல்வி அந்தோணி மகளிர் அணி நிர்வாகி கோவிந்தம்மாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# 5 ஆயிரம் ஏரி, குளங்கள் தூர்வாரப்படும்... தமிழக அரசு ரூ.500 கோடி ஒதுக்கியது



சென்னை, செப். 12

தென்மேற்கு பருவமழை முடிவுபெறும் தருவாயில் இருக்கிறது. தமிழ்நாட்டில் அதிக பலன் தரக்கூடிய வடகிழக்கு பருவமழை அக்டோபர் தொடங்கி டிசம்பர் மாதம் வரை நீடிக்கும்.

இந்த மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக விவசாயத்துக்கு பயன் தரக்கூடிய ஏரி, குளங்களைதூர்வாரிதயார் நிலைப்படுத்துவதுடன், நீர்நிலைகளை பாதுகாக்கவும் தமிழக அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

அதன்படி முதல்கட்டமாக 5 ஆயிரம் சிறுபாசன ஏரி, குளங்கள் தூர்வாரப்படுகின்றன. அதற்காக தமிழ்நாடு அரசு ரூ.500 கோடியை அனுமதித்து இருக்கிறது.

இதுகுறித்துஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நீர்நிலைகளை (ஏரி, குளங்கள்) தூர்வாரி, மழைநீரை சேகரித்து நீர் மேலாண்மை செய்வதற்கு முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 22 ஆயிரத்து 51 சிறுபாசன ஏரிகளில், முதல்கட்டமாக நடப்பு ஆண்டில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் 5 ஆயிரம் சிறுபாசன ஏரிகளை புனரமைப்பதற்காக கடந்த 5ந் தேதியன்று அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி, சிறுபாசன ஏரிகளை எந்திரங்களை பயன்படுத்திதூர்வாருதல், ஆழப்படுத்துதல், உபரி நீர்போக்கி (கலிங்கு), மதகு போன்ற அனைத்து கட்டமைப்புகளையும் பழுதுபார்த்தல், புனரமைத்தல், இணைப்பு வரத்து வாய்க்கால்களை தூர்வாருதல் ஆகியவற்றை பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நீர்நிலைகளை புனரமைப்பதால், நீர்நிலைகளின் கொள்திறன் அதிகரிக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். இத்திட்டம், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம், சமூக அமைப்புகள், விவசாயிகள் சங்கம், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றின் சொந்த நிதி ஆதாரம் மற்றும் மக்கள் பங்களிப்புடன் கூடிய நமக்கு நாமே திட்டம் மூலமாகவும் மற்றும் மீதமுள்ள சிறுபாசன ஏரிகளுக்கு அரசு நிதி மற்றும் ஊராட்சி அமைப்புகளின் நிதியின் மூலமாகவும் பணிகள் நிறைவேற்றப்படும்.

ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்புகளுடன் சேர்ந்து சிறுபாசன ஏரிகளின் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்பு இல்லாத பட்சத்தில், புதியதாக பயன்பாட்டாளர்கள் குழுக்கள் அமைத்து புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் மூலம் ஊரகப்பகுதி விவசாயிகள் பெருமளவில் பயன்பெறுவதோடு நிலத்தடி நீர்மட்டமும் கணிசமாக உயரும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கலைஞர் கொண்டு வந்த சீர்திருத்த சட்டங்களை எவராலும் அகற்ற முடியாது: நாமக்கல்லில் திருச்சி சிவா பேச்சு



நாமக்கல் செப் 12

கலைஞர் கருணாநிதியின் திமுக அரசு கொண்டு வந்த சீர்திருத்த சட்டங்களை எவராலும் மாற்ற முடியாது என நாமக்கலில் நடைபெற்ற கூட்டத்தில் திமுக கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி சிவா பேசினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நாமக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாமக்கல் மாநகராட்சி பெயர் தூ.கலாநிதி வரவேற்றார். நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவருமான கே.ஆர்.என் ராஜேஷ் குமார் எம்.பி தலைமை வைத்து பேசியதாவது:

டாக்டர் அம்பேத்கர் பார்லிமென்டில் கொண்டு வந்த மகளிருக்காண இட ஒதுக்கீடு மசோதா தோல்வி அடைந்தது அறிஞர் அண்ணா முதல்வரானதும் மகளிருக்காக கொண்டு வந்த நல் இடஒதுக்கீடு மசோதா வளர்ந்து சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது தொடர்ந்து ஒன்றிய அரசு ஒதுக்கீட்டை பின்பற்றியது. இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்டியாக இருந்தது தற்போது முதல்வர் ஸ்டாலின் மகளிருக்காண இட ஒதுக்கீட்டை 50 சதவீதம் உயர்த்தினார் தொடர்ந்து மகளிர் இலவச பேருந்து பயணம், மகளிர் சுய உதவி குழு கடன் தள்ளுபடி, நகை கடன் தள்ளுபடி, மகளிர் உரிமை திட்டம் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளார் என்றார்.

திமுக செய்தி தொடர்பாளர் டி கே எஸ் இளங்கோவன் கருத்தரங்கை துவங்கி வைத்து பேசியதாவது: தமிழர்களுடைய வளர்ச்சியை கருதி அதற்கான சட்ட வடிவங்களை கொடுத்தவர் கலைஞர். 2000 ஆண்டுகள் நடைமுறையில் இருக்கும் மொழியே செம்மொழி என போற்றப்படும் மற்ற மொழிகளை காட்டிலும் தொன்மையான செம்மொழி தமிழ் மொழியே ஆகும். சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களை வளர்ச்சிக்காக பல திட்டங்களை கொண்டு வந்தவர் கலைஞர் சைக்கிள் ரிக்`, பிச்சைக்காரர்கள் விடுதி போன்ற நலத்திட்டங்களை தனது ஒவ்வொரு பிறந்த நாளிலும் கொண்டு வந்தார் நம் பால் இனத்தவரின் வளர்ச்சிக்கு திட்டங்களை கொண்டு வந்தார். நம் தமிழர் பண்பாட்டை மீட்டெடுத்து திராவிடம், கலைஞர் திட்டங்களை, கனவுகளை ஸ்டாலினை நிறைவேற்றி வருகிறார். இதனை திமுகவிற்கு என்றும் வீழ்ச்சி இல்லை. மற்ற மாநிலங்களில் வறுமை கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு மட்டும் ரேஷன் குடும்ப அட்டை இருந்த நிலையில் 1973 ஆம் ஆண்டு கலைஞர் அரசு தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பத்திற்கும் ரேஷன் குடும்பத்தை வழங்கியது கலைஞர் மாநிலம் போற்றும் தலைவர் ஆவார் என்றார்.

திமுக கொள்கை பரப்பு செயலாளர் டெல்லி மாநிலங்களவை திமுக உறுப்பினர் தலைவருமான திருச்சி சிவா பேசியதாவது:

கலைஞர் வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். அவர் ஒரு யுகம் ஆகும். தமிழகத்தில் இன்றும் தமிழ் மொழி தான் வழக்காடும் முறையாக இருக்கிறது. நீதி கட்சி ஆட்சிக்கு வந்ததால் இது சாத்தியப்பட்டது. இந்தியாவில் முதல் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியதுடன் சொத்து சம உரிமை அவர்களுக்கு வழங்கியதும் திமுக தான்.

கலைஞர் பலத்திட்டங்களில் பரிமான வித்தவர். திரைப்படத்துறையில் கதை, வசனம், பாடல் போன்ற பலவற்றிலும் பரிமாணத்தவர். கலைஞர் கொண்டு வந்த சீர்திருத்த சட்டங்கள் எவராலும் மாற்ற முடியாது என்றார்.

கூட்டத்தில் பட்டிமன்ற பேச்சாளர் ஞானசம்பந்தம் நாமக்கல் எம்.எல்.ஏ ராமலிங்கம் மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுகவின் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர் திரளாக பங்கேற்றனர்

# அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் லோடிங் சங்கத்தின் கொடி ஏற்று விழா பெயர் பலகை திறப்பு விழா



அரியலூர், செப். 12

அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் லோடிங் சங்கத்தின் கொடி ஏற்று விழா பெயர் பலகை திறப்பு விழா தோழர் என்.பி தென்னரசு கிளைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது

இதில் சங்க கொடியினை மூத்த தோழர் சிஐடியு மாவட்டத் துணைத் தலைவர் ஆர் சிற்றம்பலம் ஏற்றி வைத்தார் பெயர் பலகையை மாவட்ட தலைவர் கே கிருஷ்ணன் திறந்து வைத்தார் சங்கத்தை வாழ்த்தி சிஐடியு மாவட்ட செயலாளர் பி துரைசாமி நிறைவுறையாற்றினார்

இதில் சங்கத்தின் தலைவர் கணேசன் பொருளாளர் முரளி துணை தலைவர்கள் ஆர் ராஜா எஸ் பூமிபாலன் ஆர் குணசீலன் கே தர்மராஜ் கிளைச் துணை செயலாளர்கள் சி குமரவேல் கே ஆனந்த கருணாமூர்த்தி சீ சின்னத்துரை தேசிங்கு ராஜ் மற்றும் ஏராளமான தொழிலாளர் தோழர்கள் கலந்து கொண்டனர் நிறைவாக தோழர் அருண்பாண்டியன் சுரங்க தொழிற்சங்க மாவட்ட செயலாளர் அவர்களின் நன்றியுடன் இனிதே கொடியேற்று விழா நிறைவுற்றது

# கம்பம் அருகே சுருளிப்பட்டியில் பூச்சிக்கொல்லிகள் குறித்த செயல் விளக்கம்



கம்பம், செப். 12

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளிப்பட்டியில் திண்டுக்கல் காந்தி கிராம வேளாண் மாணவர்கள் அன்புநிதி, ஜெகதீஸ், விவேகானந்தன், மனோ, ஹரிகரன், ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் மூலம் இப்பகுதி விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லிகளை கையாளும் முறைகள் குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

இதன் ஒரு பகுதியாக விவசாயிகள் பூச்சிக்கொல்லிகளை கையாளும் முறைகள் பாதுகாப்பு உபகரணங்களை அணிவது, மருந்து கலவையை சரியான அளவில் தயாரித்தல், தூய்மையான நீர் பயன்படுத்துதல், காற்று மிதமாக இருக்கும் பொழுது தெளித்தல் பாதுகாப்பு வழிமுறைகள் போன்ற முக்கிய அம்சங்களை விவசாயிகளுக்கு செயல் முறையாக கற்று கொடுத்தனர்.

இதன் மூலம் விவசாயிகள் பாதுகாப்பான முறையில் பூச்சிக்கொல்லிகளை கையாளும் முறைகளை கற்றுக்கொண்டனர்.

# சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடனுதவி விழா: சுய உதவி குழுக்களுக்கு ரூ.1,537 கோடி கடன்: கலெக்டர் தகவல்



கள்ளக்குறிச்சி, செப். 12

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.1,537.93 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், நீலமங்கலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட கலெக்டர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை வகித்து பேசியதாவது: கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள 466 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.59.11 கோடியில் வங்கிக் கடனுதவித் தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில், ஊரகப் பகுதியில் 7,895 சுய உதவிக்குழுக்களும், நகர்ப்புறப் பகுதியில் 1,058 சுய உதவிக்குழுக்களும் என மொத்தம் 8,953 சுய உதவிக்குழுக்கள் உள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் ரூ.1,537.93 கோடி மதிப்பீட்டில் வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உள்ளனர். குறைந்தது 2 லட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களாவது கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்வில், எம்எல்ஏக்கள் தா.உதயசூரியன், மணிக்கண்ணன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சுந்தர்ராஜன், மாவட்டமுன்னோடி வங்கி மேலாளர் ரஞ்சித், உதவி திட்டஅலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தென்காசி மாவட்டம் சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் மற்றும் உணவு திருவிழா போட்டி: கலெக்டர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, செப். 12

தென்காசி மாவட்டம் சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து மாதம் போஷன்மா 2024 மற்றும் உணவு திருவிழா போட்டி ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி கலையரங்கத்தில் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவிகளுக்கு உணவுத் திருவிழா போட்டி நடைபெற்றது. இதில் கல்லூரி மாணவிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு நெருப்பில்லா சமையல் மூலம் பல்வேறு வகையான ஊட்டச்சத்து உணவு வகைகளை சமைத்து காட்சிப்படுத்தினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கலெக்டர் .ஏ.கே.கமல்கிஷோர், பரிசுத்தொகை மற்றும் கேடயம் வழங்கினார்கள். மேலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்ட பணியாளர்கள் ஊட்டச்சத்து உணவு மற்றும் அதன் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு அரங்கு அமைத்து மாணவிகளுக்கு ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் ஐஊயுசு முஏமு அலுவலர்கள் கலந்து கொண்டு அங்கன்வாடி பணியாளர்களுக்கு காய்கறி விதைகள் மற்றும் இயற்கை உரங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்கள். மேலும் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் கல்லூரி வளாகத்தில் காய்கறி தோட்டம் அமைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பா.இசக்கியம்மாள், ஸ்ரீ பராசக்தி கல்லூரி முதல்வர் பெ.நாகேஸ்வரி, மாவட்ட சமூகநல அலுவலர் மதிவதனா குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ப.பர்கத் சுல்தானா, மகளிர் பயில்வு மைய உறுப்பினர்கள், நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப் பணியாளர்கள், மகளிர்

அதிகார மைய பணியாளர்கள் மற்றும் சகி ஒருங்கிணைந்த சேவை மைய பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# கெலமங்கலம் கணேஷ் காலனியில் ஶ்ரீலட்சுமி கணபதி சேவா சங்கம் சார்பில் பெண்களுக்கு கோலம் போட்டி



கிருஷ்ணகிரி, செப்,12

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் கெலமங்கலம் கணேஷ் காலனியில் ஶ்ரீலட்சுமிகணபதி, இளைஞர்கள் சேவாசங்கம் சார்பில் பெண்களுக்கு கோலம் போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பிரபல தொழிலதிபர்கள் சுதாகர், நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. பெண்கள் கோலம் போட்டியில் கலந்துக் கொண்டு ஒவ்வொருவரும் கோலமிட்டனர். இந்த அருமையான கோலத்திற்கு முதல் பரிசு, 2வது பரிசு, 3வது பரிசு, மற்றும் அவர்களுக்கு உதவித் தொகையும், நினைவு பரிசும், வழங்கப்பட்டது. மற்றும் இதர பெண்களுக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது சுமார் இந்த போட்டியில் 100 பெண்கள் கலந்துக் கொண்டனர்.

# தேனி மாவட்டத்தில் உயர்வுக்குப் படி உயர்க்கல்வி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சி



தேனி, செப். 12

தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு தோட்டக்கலைக் கல்லூரியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் சார்பில், நான் முதல்வன் திட்டத்தின்கீழ், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் உயர் கல்வி பயிலுவதற்கு வழிகாட்டும் உயர்வுக்குப் படி ஆலோசனை நிகழ்ச்சி மாவட்ட கலெக்டர் ஆர்.வி. ஷஜீவனா, தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட கலெக்டர் பேசியதாவது,

அரசுப்பள்ளிகளில் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதை 100 சதவீதம் உறுதிசெய்யும் பொருட்டு நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக 2022-23, 2023- 24 கல்வி ஆண்டுகளில் 12ம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற/ தேர்ச்சி பெறாத / தேர்விற்கு வருகை தராத / இடைநின்ற மாணவர்களில் உயர்கல்வி எதிலும் சேர்க்கை செய்யப்படாத மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் உயர்வுக்குப் படி நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

மேலும், உயர் கல்வி அல்லது திறன் மேம்பாட்டிற்காக மாணவர்களுக்கு தகுந்த வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும், எதிர்கால கல்வி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அனைத்து மாவட்டங்களிலும், அனைத்து துறையினரையும் ஒருங்கிணைத்து மாவட்ட, கோட்ட அளவில் உயர்வுக்குப் படி நிகழ்ச்சி இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது.

எனவே, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்று, 11, 12ம் வகுப்புகளில் இடைநின்ற / தேர்ச்சி பெறாத/தேர்ச்சி பெற்ற, இதுவரை உயர்கல்வியில் சேர்க்கை செய்யப்படாத மாணவர்கள் அனைவரும் மேற்படி உயர்வுக்குப் படி உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வழிகாட்டுதல்கள் பெற்று, உயர் கல்வி/திறன் மேம்பாட்டு பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாணவி ஒருவருக்கு என்.ஆர்.டி.பாராமெடிக்கல் கல்லூரியில் படிப்பதற்கான ஆணையினையும், மேலும், 4 மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிப்பதற்கும்,

ஒரு மாணவர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் படிப்பதற்கான ஆணைகளையும் மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

# புவனகிரி கிழக்கு ஒன்றியத்தில் அ.தி.மு.க. புதிய உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி




சிதம்பரம், செப். 12

கடலூர் கிழக்கு மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புவனகிரி கிழக்கு ஒன்றியம், சி.முட்லூர் ஊராட்சியில் புதிய உறுப்பினர் அட்டைகளை மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.பாண்டியன் நடைப்பெற்ற நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் வழங்கினார்.

கூட்டத்திற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் எம்.எஸ்.என்.குமார் தலைமை தாங்கினார். மாவட்ட கழக இணை செயலாளர் எம்.ரெங்கம்மாள், ஒன்றிய கழக செயலாளர் அசோகன், ஒன்றிய குழு உறுப்பினர் லதா ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய குழு துணை தலைவர் வ.வாசுதேவன் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான கே.ஏ.பாண்டியன் கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு புதிய உறுப்பினர் அட்டைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்நிகழ்ச்சியில் ஊராட்சிமன்ற தலைவர் அன்பரசன், நிர்வாகிகள் பிரேம்குமார், கோவிந்தராசு, ராஜெந்திரன், பாலு, உத்திராபதி, ராமகிருஷ்ணன், தாமோதிரன், கிருஷ்ணமூர்த்தி, எம்.ஜி.குமார், பாலசுப்பிரமணியன், மாரிமுத்து, குணசேகரன், ராஜகோபால், சந்தானம், விஜயா, சுந்தரி, சுபாஷினி மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். கிளை கழக செயலாளர் சுபாஷ் நன்றி கூறினார்.

# குற்றாலம் அருவிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

## ஐந்தருவியில் குளிக்க தடை



தென்காசி, செப். 12

நெல்லை மாவட்டத்தில் நேற்று மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி அமைந்துள்ள அணைப்பகுதிகளில் லேசானசாரல் மழை பெய்தது. சேர்வலாறு அணை பகுதியில் 1 மில்லிமீட்டரும், மணிமுத்தாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியில் விட்டு விட்டு சாரல் மழை பெய்தது.

தென்காசி மாவட்டத்தில் நகர் பகுதிகளை பொறுத்தவரை செங்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் 2 மில்லிமீட்டர் மழை பதிவாகியது. சில இடங்களில் மாலையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதோடு குளிர்ந்த காற்று வீசியது. ஒரு சில இடங்களில் இரவில் லேசான சாரல் அடித்தது.


மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் அமைந்துள்ள குற்றாலம் அருவிகளில் சீசன் முடிவுற்ற நிலையிலும் அவ்வப்போது பெய்யும் மழையால் அனைத்து அருவிகளிலும் தண்ணீர் விழுகிறது. சில நாட்களாக மழை இல்லாததால் நீர் வரத்து படிப்படியாக குறைய தொடங்கிய நிலையில் நேற்று இரவில் திடீரென மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் கனமழை பெய்தது.

இதன் காரணமாக குற்றாலத்தை அடுத்த ஐந்தருவி பகுதியில் தண்ணீர் மெல்ல மெல்ல அதிகரித்தது. திடீரென தண்ணீர் வரத்து அதிகரித்ததால் பாதுகாப்பு கருதி அங்கு சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் நீர்வரத்து அதிகமாக இருந்த நிலையில் வெள்ளம் ஏற்பட்டு, மண் மற்றும் கற்கள் அடித்து வரப்பட்டதால் இரவு முழுவதும் மட்டுமின்றி இன்று காலை வரை தடை நீட்டிக்கப்பட்டது.

அங்கு போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று காலையிலும் குற்றாலம் பகுதியில் விட்டு விட்டுசாரல்மழைபெய்து வருவதால் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவி வருகிறது. மற்ற அருவிகளில் குளிப்பதற்கு எவ்வித தடையும் இல்லாததால் ஐந்தருவியில் தண்ணீர் வரத்து சீராகும் பட்சத்தில் அங்கும் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப் படுவார்கள்.

மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி அமைந்துள்ள குண்டாறு மற்றும் அடவிநயினார் அணை பகுதிகளில் கன மழை பெய்தது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து ஏற்பட்டது. குண்டாறில் 6.2 மில்லிமீட்டரும், அடவிநயினார் அணையில் 7 மில்லிமீட்டரும் மழை பெய்தது.

# நாமக்கல்லில் முட்டை விலை ரூ.5.05 ஆக நிர்ணயம்



நாமக்கல், செப். 12

நாமக்கல், சேலம், ஈரோடு, பெருந்துறை, கோவை உள்ளிட்ட நாமக்கல் மண்டலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு சுமார் 6 கோடி முட்டைக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. தினசரி சுமார் 5 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப் படுகிறது.

தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கும், வெளிநாட்டிற்கு ஏற்றுமதிக்கும் போக, மீதமுள்ள முட்டைகள், கேரளா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக தினசரி லாரிகளில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு (என்இசிசி), தினசரி பண்ணைகளில்ரொக்கவிற்பனைக்கு, முட்டை விலையை அறிவித்து வருகிறது.

அதை பண்ணையாளர்கள் கடைபிடித்து வருகின்றனர்.

அதன்படி நேற்று என்இசிசி மண்டல தலைவர் சிங்கராஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், முட்டை விலை மேலும் 5 பைசா உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை ரூ. 5.05 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# சென்னை-மன்னார்குடி இடையே வந்தே பாரத் ரெயில்... ரெயில்வே ஆய்வு செய்கிறது



சென்னை, செப். 12

சென்னையில் இருந்து திருநெல்வேலி, நாகா்கோவில், கோவை, மைசூரு, விஜயவாடா ஆகிய நகரங்களுக்கு வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களை இணைக்கும் வகையில் கடலூர் துறைமுகம், மயிலாடுதுறை, தஞ்சாவூா் வழியாக மன்னார்குடிக்கு ஒரு வந்தே பாரத் ரெயில் இயக்க வேண்டும் என ரெயில் பயணிகள் சங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது.

'சென்னையில் இருந்து மன்னார்குடி, தஞ்சாவூருக்கு குறைந்த எண்ணிக்கையிலேயே ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடத்தில் வேளாங்கண்ணி, திருவாரூா், கும்பகோணம், மயிலாடுதுறை, சிதம்பரம் உள்ளிட்ட முக்கிய ஆன்மிக நகரங்களும், கடலூர் போன்ற வர்த்தக நகரங்களும் உள்ளன.

சென்னைஅல்லது பெங்களூரில் இருந்து டெல்டா மாவட்டம் வழியாக மன்னார்குடி அல்லது புதுச்சேரிக்கு புதிய வந்தே பாரத் ரெயில் இயக்க வேண்டும் என மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது' என ரெயில் பயணிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். இதையடுத்து, சென்னை எழும்பூரில் இருந்து மயிலாடுதுறை, தஞ்சாவூர் வழியாக மன்னார்குடிக்கு புதிய வந்தே பாரத் ரெயில் சேவை தொடங்க ஆய்வு மேற்கொண்டு வருவதாக ரெயில்வே அதிகாரிகள் தெரிவிக்கின்றனா். சாத்தியக்கூறு தொடா்பான பல்வேறு அம்சங்களை ரெயில்வே அதிகாரிகள் ஆய்வு செய்து ரெயில்வே வாரியத்துக்கு அறிக்கை அளிப்பார்கள். அதன் அடிப்படையில் மன்னார்குடிக்கு வந்தே பாரத் ரெயில் இயக்குவது பற்றிய அறிவிப்பு வெளியிடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனா்.

# விசிக சார்பில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மாநாடு: அதிமுகவுக்கு திருமாவளவன் அழைப்பு



சென்னை, செப். 12

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் இன்று பத்திரிகையாளர் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அக்டோபர் 2ந்தேதி மகாத்மாகாந்திபிறந்தநாள் அன்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மகளிர் விடுதலை இயக்கம் சார்பில் மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாடு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெறும். தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத்தால் நூற்றுக்கணக்கானோர் பலியாகி வருகின்றனர். 2006ல் இருந்து 2024 வரை 1589 பேர் பலியாகியுள்ளனர்.

2016 தேர்தல் அறிக்கையில் திமுக படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்துவோம் என்று உறுதியளித்தது. திமுகவுக்கும் மதுவிலக்கு கொள்கையில் உடன்பாடு உண்டு. அதிமுகவுக்கும் உடன்பாடு உண்டு. இடது சாரி கட்சிகளுக்கும் மதுவிலக்கு கொள்கையில் உடன்பாடு உண்டு. விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் உடன்பாடு உண்டு.

எல்லா கட்சிகளுக்கும் மதுவிலக்கை வலியுறுத்தும் நிலையில், மதுக்கடைகளை மூடுவதில் தயக்கம் ஏன்? என்பதுதான் எல்லோருடைய கேள்வி.

நல்லச்சாராயத்தால் கள்ளச்சாராயத்தை தடுக்க முடியும் என்ற வாதம் ஏற்புடையது அல்ல. சாராயம் என்றாலே அது கேடுதான். நல்லச்சாராயம் என்று ஏதும் இல்லை.

உள்ளத்திற்கும், உடலுக்கும் தீங்கானது. சமூகத்திற்கும், தேசத்திற்கும் கேடானது. ஆகவே முழுமையான மதுவிலக்குதான் தீர்வாக இருக்க முடியும்.

அரசாங்கமே மதுவை விற்பனை செய்தால் கள்ளச்சாராயத்தை தடுத்து நிறுத்த முடியும் என்பதை கற்பனையான வாதம். எல்லா மாநிலங்களிலும் கள்ளச்சாராயம் புழக்கத்தில் இருக்கிறது. ஒன்றிரண்டு மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் அரசுகள் மதுபான கடைகளை திறந்திருக்கிறது.

பீகார், குஜராத் மாநிலங்கள் மதுவிலக்கை அமல்படுத்தினாலும் கள்ளச்சாராயம் புழக்கத்தில் இருக்கதான் செய்கிறது. அதற்கு காரணம் அண்டை மாநிலங்களில் மதுபானங்கள் இருப்பதால். அதனால் கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. சாராய விற்பனையில் அரசு ஒரு தாராளமான நிலைப்பாட்டை எடுக்கும்போது, கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த அவர்களால் கவனம் செலுத்த முடியவில்லை.

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

மேலும் தயக்கம் ஏன்? என்பது யாரை குறித்து கேட்கிறீர்கள் என்ற கேள்விக்கு மதுவிலக்கை வலியுறுத்தும் எல்லோருக்கும் தான். அதிமுகவும் சொல்கிறது. ஆனால் அமல்படுத்தவில்லை. அவர்களும் எங்களுடன் சேரட்டும். இந்த மாநாட்டிற்கு வர விரும்பினால் வரட்டும். அதிமுக கூட வரலாம். எந்த கட்சிகளும் வரலாம் என்றார். மது ஒழிப்பை வலியுறுத்தும் அனைவரும் ஒரே மேடையில் நிற்கும் தேவை உள்ளது.

# தருமபுரி மாவட்டம் முழுவதும் அக்டோபர் 4ந் தேதி கடையடைப்பு போராட்டம்: அன்புமணி ராமதாஸ்



சென்னை, செப். 12

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டின் வறண்ட மாவட்டமாகவும், வேலை வாய்ப்பற்ற பின் தங்கிய மாவட்டமாகவும் திகழும் தருமபுரி மாவட்டத்தை வளம் கொழிக்கும் மாவட்டமாக மாற்ற தருமபுரிகாவிரி உபரி நீர் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று பத்தாண்டுகளாக வலியுறுத்தப் பட்டு வரும் நிலையில் அதை செயல்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை. தருமபுரி மாவட்ட மக்கள்நலன் காக்கும் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழக அரசு காட்டும் அலட்சியமும், தாமதமும் கண்டிக்கத்தக்கவை.

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 4.50 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் நடைபெறுகிறது. ஆனால், அதில் 1.96 லட்சம் ஹெக்டேர், அதாவது 43.52 சதவீதம் நிலங்கள் மட்டுமே பாசன வசதி பெற்றவை. மீதமுள்ள 56.48சதவீதம்நிலங்களில் மழையை நம்பி தான் விவசாயம் நடைபெறுகிறது. அதனால், தருமபுரி மாவட்ட வேளாண் குடும்பங்கள் நிலம் இருந்தும் பாசன ஆதாரம் இல்லாமல் தவித்து வருகின்றனர். அதனால்,தருமபுரிமாவட்டத்தில் கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு, 3 லட்சத்துக்கும் கூடுதலான மக்கள் வெளி மாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலும் வேலை தேடிச் சென்றுள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் 1200 அடிக்கும் கீழ் சென்று விட்டதால், வேளாண்மைக்கு புத்துயிரூட்டுவது சாத்தியமற்றதாகி வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஈச்சம்பாடி அணை, கேசரகுழிபள்ளம் அணை, சின்னாறு அணை, தும்பலஅள்ளி அணை, தொப்பையாறு அணை, நாகாவதி அணை, பஞ்சப்பள்ளி அணை, வரட்டாறு அணை, வள்ளிமதுரை அணை, வாணியாறு அணை ஆகிய 10 அணைகளும் வறண்டு கிடக்கும் நிலையில், அந்த அணைகளில் மட்டுமின்றி, 83 ஏரிகள், 769 சிறிய ஏரிகள் உட்பட மொத்தம் 1230 நீர்நிலைகளிலும் நிரப்பி ஆண்டு முழுவதும் உழவு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான உன்னத திட்டம் தான் தருமபுரிகாவிரி உபரி நீர் திட்டம் ஆகும்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவது மிகவும் எளிது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக ஏற்கனவே குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை செல்லும் பாதையிலேயே இந்தத் திட்டத்திற்காக குழாய்களை அமைத்து தண்ணீரைக் கொண்டு செல்ல முடியும். தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்கு இடையே நீர் செல்லும் பாதை மன்னர்கள் காலத்திலேயே அமைக்கப்பட்டிருப்பதால் சில ஏரிகளில் நிரப்புவதன் மூலம் அனைத்து நீர்நிலைகளுக்கும் தண்ணீரை கொண்டு செல்ல முடியும்.

ஒட்டுமொத்த மாவட்டமும் பயன் பெறும் தருமபுரிகாவிரி உபரி நீர்த் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.650 கோடியை செலவழிக்க அரசு மறுக்கிறது.

தருமபுரி மாவட்டம் வறட்சி மாவட்டமாகவே தொடர்வதை அனுமதிக்க முடியாது. தருமபுரி மாவட்டத்தின் உழவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் வேண்டுகோளையும் ஏற்று, தருமபுரிகாவிரி உபரிநீர் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வரும் அக்டோபர் 4ந் தேதி வெள்ளிக்கிழமை தருமபுரி மாவட்டம் முழுவதும் அரை நாள் கடையடைப்பு போராட்டம் நடத்த பா.ம.க. அழைப்பு விடுத்திருக்கிறது. தருமபுரி மாவட்டத்தின் வளமான எதிர்காலத்திற்காக நடத்தப்படும் இந்த அறவழிப் போராட்டத்திற்கு வணிகர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் முழு ஆதரவு கொடுத்து, தருமபுரிகாவிரி உபரிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் எனக் கோருகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பணியில் ஒழுங்கீனம் தலைமை ஆசிரியை, உதவி தலைமை ஆசிரியர் இடமாற்றம்

கொடைக்கானல், செப். 12

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகே வில்பட்டி ஊராட்சி பாரதி அண்ணாநகர் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியையாக இருப்பவர் வனிதா. உதவி தலைமை ஆசிரியராக இருப்பவர் சேதுமுருகன். இவர்கள் 2 பேரும் பள்ளிக்கு சரியாக வருவதில்லை என்று தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் இருந்தது.

வாரத்தில் 1 நாள் கூட தலைமை ஆசிரியர் பள்ளிக்கு வருவதில்லை என்றும், மாணவர்களின் கோரிக்கை குறித்து ஆசிரியர்களோ,பெற்றோர்களோ புகார் அளிக்கச் சென்றால் அங்கு யாரும் இருப்பதில்லை எனவும் குற்றச்சாட்டு எழுந்தது.

தலைமை ஆசிரியைக்கு உடந்தையாக உதவி தலைமை ஆசிரியரும் செயல்பட்டதால் அவர்கள் 2 பேர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். கடந்த மாதம் 20ந் தேதி மாவட்ட கல்வி அதிகாரிகள் பள்ளியில் ஆய்வு செய்தபோது பொதுமக்கள் அளித்த புகாரில் உண்மை இருப்பது கண்டறியப்பட்டது. இந்நிலையில் கொடைக்கானலில் பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்ட பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி புகாருக்கு உள்ளான வில்பட்டி ஊராட்சி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து கல்வி அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதனையடுத்து தலைமை ஆசிரியை வனிதாவையும், உதவி தலைமை ஆசிரியர் சேதுமுருகனையும் பணி இடமாற்றம் செய்ய அமைச்சர் உத்தரவிட்டார். அதன்படி தலைமை ஆசிரியை வனிதா அடுக்கம் ஊராட்சி சாமக்காட்டு பள்ளம் பகுதியில் உள்ள பள்ளிக்கும், உதவி தலைமை ஆசிரியர் சேதுமுருகன் பூண்டி பகுதியில் உள்ள பள்ளிக்கும் பணி இடமாற்றம் செய்யப்பட்டனர்.

# ஆசிரியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதில் அலட்சியம் காட்டுவதா? ராமதாஸ் கண்டனம்



சென்னை, செப். 12

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்; ஊதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும்; தற்காலிக ஆசிரியர்களுக்கு பணி நிலைப்பு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 30 கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் பத்தாண்டுக்கும் மேலாக போராடி வருகின்றனர். அவற்றில் ஒரு கோரிக்கையைக் கூட நிறைவேற்றாத தமிழக அரசு, கடந்த ஆண்டு டிசம்பர் 21ம் நாள் 243 என்ற எண் கொண்ட அரசாணையை பிறப்பித்து, அவர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளை பறித்திருக்கிறது.

ஆனால், சமவேலைக்கு சம ஊதியம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆசிரியர் அமைப்புகள் பல கட்ட போராட்டங்களை நடத்தின. அதைத் தொடந்து அக்கோரிக்கையை ஆய்வு செய்ய பள்ளிக்கல்வித்துறை செயலாளர், இயக்குனர், தொடக்கக்கல்வி இயக்குனர் ஆகியோர் அடங்கிய குழு கடந்த ஆண்டு தொடக்கத்தில் அமைக்கப்பட்டது. அக்குழுவினர் ஆசிரியர் அமைப்புகளுடன் மூன்று கட்ட பேச்சு நடத்தினர்.

அதில் சிறிதும் முன்னேற்றம் ஏற்படவில்லை. அதுமட்டுமின்றி, கடந்த 10 மாதங்களுக்கும் மேலாக எந்த பேச்சும் நடத்தப்படவில்லை. மூவர் குழுவில் இடம் பெற்றிருந்த மூவரும் பணியிட மாற்றம் செய்யப்பட்டு விட்ட நிலையில், இப்போது அக்கோரிக்கை குறித்து மீண்டும் கருத்துக் கேட்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. 20 மாதங்களாக எந்தத் தீர்வும் காணாமல், இனி கருத்துக் கேட்டு சிக்கலைத் தீர்க்கப் போவதாக அரசு கூறுவது ஏமாற்று வேலை ஆகும். எளிதில் நிறைவேற்ற க்கூடிய பல கோரிக்கைகளையும் நீதிமன்ற வழக்குகளைக் காரணம் காட்டி நிறைவேற்ற மறுக்கிறது தமிழக அரசு. தமிழக அரசு நினைத்தால் ஒரே நாளில் அந்த வழக்குகளை உயர்நீதிமன்ற ஒப்புதலுடன் முடிவுக்கு கொண்டு வந்து விடலாம். ஆனால், ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஏற்பதற்கு தமிழக அரசுக்கு மனமில்லாதது தான் அனைத்துச் சிக்கல்களுக்கும் காரணம் ஆகும். எதிர்காலத் தலைமுறையினரை அறிவார்ந்த சமுதாயமாக உருவாக்குவது ஆசிரியர்கள் தான். அதிலும், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இதில் சிறப்புப் பங்கு உண்டு. இத்தகைய பெருமை கொண்ட ஆசிரியர்கள் அவர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி சாலையில் இறங்கி போராடுவதையே தங்களுக்கு ஏற்பட்ட அவமதிப்பாக அரசு கருத வேண்டும்.

எனவே, தமிழக அரசு இனியும் அலட்சியம் காட்டாமல், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்; அதன் மூலம் அவர்களின் அடுத்தக் கட்ட கோட்டை முற்றுகைப் போராட்டத்தை தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் நிலவரம்



சேலம், செப். 12

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 114.91 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு நேற்று 11 ஆயிரத்து 736 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் அது இன்று வினாடிக்கு 10 ஆயிரத்து 706 கனஅடியாக குறைந்தது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 23 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 700 கனஅடி தண்ணீரும் திறக்கப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் தண்ணீரை விட அதிகளவில் திறக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

அணையில் தற்போது 85.58 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

# கார் விபத்தில் சிக்கிய ஜீவா



கள்ளக்குறிச்சி, செப். 12

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக இருக்கும் ஜீவா கார் விபத்தில் சிக்கி இருக்கிறார். கள்ளக்குறிச்சியில் இருந்து சென்னைக்கு குடும்பத்தினருடன் காரில் வந்து கொண்டிருந்திருக்கிறார் ஜீவா. அப்போது, கள்ளக்குறிச்சியின் சின்னசேலம் அருகே கார் வந்தபோது எதிர்பாராதவிதமாக இரு சக்கர வாகனம் ஒன்று காரின் குறுக்கே வந்துள்ளது.

இதனால், அதில் மோதாமல் இருக்க ஜீவா காரை திருப்ப சாலையோர தடுப்பு கட்டையில் கார் மோதி விபத்துக்குள்ளானது. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை. இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் போக்குவரத்து நெரிசலும், பரபரப்பும் ஏற்பட்டது.

நடிகர் ஜீவா தற்போது 'மாநகரம், டாணாக்காரன்' போன்ற படங்களை தயாரித்த பொட்டன்சியல் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள புதிய படத்தில் நடித்துள்ளார். கே.ஜி. பாலசுப்ரமணி இயக்கியுள்ள இந்த படத்தில் நடிகர் ஜீவா கதாநாயகனாகவும், நடிகை பிரியா பவானி சங்கர் கதாநாயகியாகவும் நடித்துள்ளனர். இப்படத்திற்கு சாம்.சி.எஸ் இசையமைத்துள்ளார். இந்த படத்திற்கு 'பிளாக்' என்று பெயரிடப்பட்டுள்ளது. விரைவில் இப்படம் திரைக்கு வரவுள்ளது.

# திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரியில் மதுபோதையில் ரகளை செய்த டாக்டர்



திருவள்ளூர், செப். 12

திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரியில்சுமார்500க்கும் மேற்பட்டோர் உள்நோயாளிகளாக சிசிக்சை பெற்று வருகிறார்கள். 150க்கும் மேற்பட்ட டாக்டர்கள் மற்றும் பயிற்சி டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினந்தோறும் ஏராளமானோர் வந்து சிகிச்சை பெற்று செல்கிறார்கள்.

இந்த நிலையில் நேற்று இரவு ஆஸ்பத்திரியில் உள்ள அவசர சிகிச்சை பிரிவில் டாக்டர் ஒருவருக்கு பணி ஒதுக்கப்பட்டு இருந்தது. பணிக்கு வந்த அந்த டாக்டர் அதிக மதுபோதையில் இருந்துள்ளார். மேலும் அவர் நோயாளிகளுடன் உடன் இருந்த உறவினர்களை ஒருமையில் பேசி திட்டி வெளியே அனுப்பி உள்ளார்.

மேலும் அவர் மது போதை மயக்கத்தில் ஆஸ்பத்திரி வெளியே உள்ள திண்ணையில் படுத்து தூங்கினார். இதனை கண்டு ஆஸ்பத்திரி ஊழியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக அவரை ஆஸ்பத்திரி உள்ளே செல்லுமாறு தெரிவித்தனர். ஆனால் போதை மயக்கத்தில் இருந்த அந்த டாக்டர் ஆஸ்பத்திரிக்குள் செல்ல மறுத்து ரகளையில் ஈடுபட்டார்.

இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த ஊழியர்கள், போதை டாக்டரை காவலாளிகள் தங்கும் அறையில் படுக்க வைத்தனர். இன்று காலை நீண்ட நேரத்திற்கு பின்னர் போதை தெளிந்ததும் அந்த டாக்டர் புறப்பட்டு சென்று உள்ளார். அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த டாக்டர் மது போதையில் தூங்கிய சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. சம்பந்தப்பட்ட டாக்டர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர். டாக்டர் நல்லதம்பி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என டீன் ரேவதி உறுதி அளித்துள்ளார்.

# நெல்லையில் பள்ளிக்கு அரிவாளுடன் வந்த மாணவனால் பரபரப்பு




நெல்லை, செப். 12

நெல்லை மாவட்டம் தாழையூத்து பகுதியில் அரசு உதவிபெறும் பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்த நிலையில் பள்ளியில் பயிலும் மாணவர்களின் புத்தகப் பையை சோதனையிட்டபோது, 10ம் வகுப்பு படிக்கும் மாணவர் ஒருவரின் பையில் அரிவாள் இருந்துள்ளது.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஆசிரியர்கள் அந்த அரிவாளை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அந்த மாணவனை தலைமை ஆசிரியரிடம் அழைத்துச் சென்று விசாரித்துள்ளனர். அப்போது அதே பள்ளியில் படிக்கும் சக மாணவன் ஒருவனுடன் தகராறு ஏற்பட்டதாகவும், அந்த மாணவனை எச்சரிப்பதற்காக அரிவாளை எடுத்து வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து தாழையூத்து போலீசாரிடம் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து பள்ளிக்கு வந்த தாழையூத்து போலீசார், விசாரணைக்குப் பின்னர், அரிவாள் எடுத்து வந்த மாணவன் உட்பட 3 மாணவர்களைசிறார்கூர்நோக்கு இல்லத்தில் அடைத்தனர். இந்த சம்பவம் நெல்லை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஒரே விலையில் பெட்ரோல், டீசல் மத்திய அரசு பதிலளிக்க உத்தரவு

சென்னை, செப். 12

பெட்ரோல், டீசலை ஜி.எஸ்.டி. வரி வரம்புக்குள் கொண்டு வந்து, நாடு முழுவதும்ஒரேவிலைக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க கோரி வழக்கறிஞர்கனகராஜ்சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில் பெட்ரோல், டீசலை ஜி.எஸ்.டி. வரம்புக்குள் கொண்டு வந்தால் அவற்றின் விலை கணிசமாக குறையும் என தெரிவித்திருந்தார். இந்நிலையில், இந்தமனுஇன்றுசென்னை ஐகோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த மனுவுக்கு 4 வாரங்களில் பதிலளிக்க மத்திய அரசுக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. மேலும் ஏற்கனவே, பெட்ரோல், டீசலை ஜி.எஸ்.டி. வரம்பில் சேர்க்கும் கோரிக்கையை பரிசீலிக்க கேரள ஐகோர்ட்டு உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவுப்படி என்ன முடிவெடுக்கப்பட்டது என்பது குறித்து விளக்கமளிக்க மத்திய அரசுக்கு சென்னைஐகோர்ட்டு அவகாசம் வழங்கியுள்ளது.

# மதுபோதையில் தாக்குதல் பாடகர் மனோவின் மகன்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு



சென்னை, செப். 12

பிரபல பின்னணி பாடகர் மனோவின் மகன்கள் மற்றும்அவர்களதுநண்பர்கள் உள்ளிட்ட 4 பேர், மது போதையில் கல்லூரி மாணவர் மற்றும் சிறுவன் மீது தாக்குதல் நடத்தி உள்ளனர். இதில்காயமடைந்த மாணவர்கள் சென்னை கீழ்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனையடுத்து, பாடகர் மனோவின் மகன்களான சாஹீர், ரபிக் அவர்களின் நண்பர்களான விக்னேஷ் மற்றும் தர்மா ஆகியோர்மீது வளசரவாக்கம் போலீசார் கொலை மிரட்டல், தாக்குதல், ஆபாசமாக பேசுதல் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதனையடுத்து, விக்னேஷ் மற்றும் தர்மா ஆகியோரை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சாஹீர், ரபிக் ஆகியோர் தலைமறைவாக உள்ளதாக போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, அவர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# மனைவியின் தகாத உறவு: கணவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டதால் பரபரப்பு




மதுரை, செப். 12

மதுரை மாவட்டம் பாலமேடு பகுதியை சேர்ந்தவர் பொன்வேந்தன் (வயது 35). இவர் சென்னையில் கால் டாக்சி ஓட்டி வந்தார். இவருடைய மனைவி முத்துபிரியா (30). இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள். இவர்களுக்கு 3 ஆண் குழந்தைகள் உள்ளனர். முத்துபிரியா பாலமேட்டில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். அப்போது அவருக்கும், வேறு ஒருவருக்கும் பழக்கம் ஏற்பட்டு கள்ளக்காதலாக மாறியது.

இதை அறிந்த பொன்வேந்தன் மனைவியை கண்டித்துள்ளார். இதையடுத்து முத்துபிரியா மகன்களையும், காதல் கணவரையும் விட்டுவிட்டு கள்ளக்காதலனுடன் ஓடிவிட்டார். இதனால் மனமுடைந்த பொன்வேந்தன் சம்பவத்தன்று பாலமேடு காவல் நிலையம் அருகில் உடலில் பெட்ரோலை ஊற்றி தீக்குளித்தார்.

அங்கிருந்த போலீசாரும், அப்பகுதி மக்களும் அவரை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி பொன்வேந்தன் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து பாலமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

கள்ளக்காதலனோடு தாய் சென்றநிலையில், தந்தையும் தீக்குளித்து உயிரிழந்ததால் 3 குழந்தைகளும் பரிதவித்து வருகிறார்கள். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஆப்பிள் நிறுவன தலைவர் டிம் குக்கை சந்தித்த சித்தார்த்அதிதி ஜோடி



நடிகர் சித்தார்த்தும் நடிகை அதிதி ராவும் காதலித்து வருவதாக கிசுகிசுக்கப்பட்டு வந்தது. இருதரப்பிலும் இதை மறுக்கவோ, ஏற்கவோ இல்லை. இருவரும் பொது நிகழ்ச்சிகளிலும் ஒன்றாகவே பங்கேற்றனர். இதுதொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளத்தில் வைரலானது. சித்தார்த்தும், அதிதி ராவும் தெலுங்கானாவில் உள்ள வனபர்த்தியில் உள்ள ஸ்ரீரங்கநாயக சுவாமி கோவிலில் திருமணம் செய்துகொண்டனர்.

இதற்கிடையே, உலகின் பிரபலமான ஆப்பிள் நிறுவனம் நேற்று தனது நியூ மாடல் ஐ போன் சீரிஸ், வாட்ச் சீரிஸ், ஏர் பாட்ஸ் போன்றவற்றை அறிமுகம் செய்தது. இதற்கான அறிமுக வெளியீட்டு விழா 'இட்ஸ் க்ளோடைம்' என்ற தலைப்பில் அமெரிக்காவின் ஆப்பிள் பார்க் தலைமையகத்தில் நடந்தது. இந்நிகழ்வில் நடிகர்கள் சித்தார்த், அதிதி ராவ் ஹைதரி ஆகியோர் பங்கேற்று ஆப்பிள் நிறுவனத் தலைவரும், தற்போதைய தலைமை செயல் அதிகாரியுமான டிம் குக் உடன் கலந்துரையாடினர்.

இந்நிலையில், டிம் குக்குடன் எடுக்கப்பட்ட புகைப்படத்தை சித்தார்த் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில், "மறக்கமுடியாத மேஜிகல் அனுபவத்தை கொடுத்த டிம் குக்கிற்கு நன்றி. வியப்பூட்டும் வகையில் எங்களைச் சுற்றி புதிய தொழில்நுட்பங்களும், சிறந்த படைப்பாற்றல்களும் இருந்தன. அதனால் எங்களுக்கு கடந்த இரண்டு நாட்கள் மிகச்சிறப்பாக அமைந்தது. ஆப்பிள் நிறுவனத்தில் பணிபுரிந்தவர்களைச் சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தது" என பதிவிட்டுள்ளார்.

# ஜெயம் ரவி புதிய படம் இயக்குனர் இவரா? ரசிகர்கள் அதிர்ச்சி




ஜெயம்ரவிதற்பொழுதுபிரதர்,ஜீனிமற்றும்காதலிக்கநேரமில்லைதிரைப்படத்தில் நடித்துள்ளார். பிரதர் திரைப்படம் வரும் அக்டோபர் 10 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

பிரதர் திரைப்படத்தை ராஜேஷ் இயக்கியுள்ளார். இவருடன் பிரியங்கா மோகன் கதாநாயகியாக நடித்துள்ளார்.

இப்படம் முழுக்க முழுக்க ஒரு காமெடி திரைப்படமாக உருவாகியுள்ளது.

அதைத்தொடர்ந்து காதலிக்க நேரமில்லை மற்றும் ஜீனி ஆகிய திரைப்படங்கள் ரிலீசுக்கு தயாராகி வருகிறது.

இன்று பிறந்தநாள் கொண்டாடும் ஜெயம் ரவிக்கு, பலர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அவர் நடித்த படங்களின் அப்டேட்டுகள் வந்த வண்ணம் உள்ளன. அடுத்ததாக ஜெயம் ரவி, கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் படம் நடிக்கவுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

தற்பொழுது சூர்யா 44 திரைப்படத்தை இயக்கி வருகிறார் கார்த்தி சுப்பராஜ். அதை முடித்துவிட்டு ஜெயம் ரவி திரைப்படத்தை இயக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்படத்தை கார்த்தி சுப்பராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

இதுக்குறித்த அதிகாரப்பூர்வ தகவல் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'டம்மா கோலி கொப்பன் காலி' லப்பர் பந்து பாடல் வெளியானது




பிரின்ஸ் பிக்சர்ஸ்' தயாரித்த 'லப்பர் பந்து' படம் கிரிக்கெட் விளையாட்டை மையமாக கொண்ட கதையாகும். இதனை அறிமுக இயக்குனர் தமிழரசன் பச்சமுத்து எழுதி இயக்கியுள்ளார்.

மேலும் இப்படத்தில் அட்டகத்தி தினேஷ், ஹரிஷ் கல்யாண் ஆகியோர் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த படத்தில் சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, பால சரவணன், காளி வெங்கட், ஸ்வாசிகா விஜய் உள்ளிட்ட பலர் நடித்து உள்ளனர்.

ஹரிஷ் கல்யாண் இந்தப் படத்தில் அன்பு என்ற கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இந்த படத்துக்கு ஷான் ரோல்டன் இசை அமைத்துள்ளார். தினேஷ் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. மேலும், லப்பர் பந்து வரும் செப்டம்பர் மாதம் 20ம் தேதி திரையரங்கில் வெளியாகவுள்ளது. படத்தின் மூன்றாவது பாடலான டம்மா கோலி என்ற பாடல் தற்பொழுது வெளியாகியுள்ளது. பாடல் ஒரு கானா பாடலாக அமைந்துள்ளது.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டி20: விளையாடும் வீரர்களை அறிவித்த இங்கிலாந்து அணி



ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டி20 போட்டி இன்றுநடைபெறஉள்ளது.இந்தநிலையில்இந்தபோட்டிக்கான விளையாடும் வீரர்களை இங்கிலாந்து அணி அறிவித்துள்ளது. காயம் காரணமாக ஜோஸ் பட்லர் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடரில் இருந்து விலகியுள்ளார். பில் சால்ட் இங்கிலாந்து அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து அணி: பில் சால்ட், வில் ஜாக்ஸ், ஜோர்டான் காக்ஸ், லிவிங்ஸ்டன், பெத்தெல், சாம் கரன் , ஓவர்டன், ஜோப்ரா ஆர்ச்சர், ஆதில் ரஷீத், சாக்யூப் மஹ்முத் ,ரீஸ் டாப்ளே.

# புரோ கபடி லீக்: தமிழ் தலைவாஸ் அணியின் கேப்டனாக சாகர் ரதி




12 அணிகள் இடையிலான 11வது புரோ கபடி லீக் போட்டி அடுத்த மாதம் (அக்டோபர்) 18ந்தேதி ஐதராபாத்தில் தொடங்குகிறது.

இந்நிலையில் தமிழ் தலைவாஸ் அணியின் சார்பில், அணியின் கேப்டன் மற்றும் வீரர்கள் அறிமுக கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில், தமிழ் தலைவாஸ் அணியின் தலைமை பயிற்சியாளர் உதய்குமார், வியூக பயிற்சியாளர் சேரலாதன், தமிழ் தலைவாஸ் அணியின் வீரர்கள் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ் தலைவாஸ் அணியின் வியூக பயிற்சியாளர் சேரலாதன்,"இந்த சீசனிலும் அணியின் கேப்டனாக சாகர் ரதி செயல்படுவார். தமிழ் தலைவாஸ் அணி நிச்சயம் கோப்பையை வெல்ல போராடும். கடந்த முறை செய்த தவறுகளைசரிசெய்துஅணியைபலப்படுத்துவோம்.ஏலம்முறையில் வீரர்களை தேர்வு செய்வதால், தமிழ் தலைவாஸ் அணியில் அதிக தமிழ்நாடு வீரர்கள் எடுக்கப்படுவதில்லை, எனினும் தமிழ்நாடு வீரர்களை தேர்ந்தெடுக்க தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். புரோ கபடி லீக்கில் அனைத்து அணிகளிலும் 25க்கும் மேற்பட்ட தமிழ்நாடு வீரர்கள் விளையாடி வருகின்றனர்" என்று தெரிவித்தார்.

இதன்படி தொடர்ந்து 3வது முறையாக சாகர் ரதி கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது தலைமையில் தமிழ் தலைவாஸ் அணி 9வது சீசனில் முதல்முறையாக பிளேஆப் சுற்றுக்கு முன்னேறியது. ஆனால் கடந்த முறை 9வது இடத்துக்கு தள்ளப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சாகர் ரதி, 'தமிழ் தலைவாஸ் அணியின் கேப்டனாக தொடர்ந்து பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பது உற்சாகம் அளிக்கிறது. இந்த ஆண்டுக்கான அணியில் சரியான கலவையில் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். மிகச்சிறந்த நிலையை எட்டுவதே எங்களது இலக்கு. ஒவ்வொரு புள்ளி மற்றும் தடுப்பாட்டத்துக்காக நாங்கள் கடினமாக உழைப்போம்' என்றார்.

# ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி: ஹாட்ரிக் வெற்றி பெறுமா இந்தியா..? மலேசியாவுடன் இன்று மோதல்



8வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி சீனாவின் ஹூலுன்பியர் நகரில் நடந்து வருகிறது.

இதில் பங்கேற்றுள்ள 6 அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெறும். இந்திய அணி தனது முதல் 2 ஆட்டங்களில் முறையே சீனா மற்றும் ஜப்பான் அணிகளை வீழ்த்தி கம்பீரமாக நடைபோட்டு வருகிறது. இதனையடுத்து இந்திய அணி தனது 3வது ஆட்டத்தில் நாளை மலேசியாவுடன் மோத உள்ளது. இந்த ஆட்டத்திலும் வென்று இந்தியா ஹாட்ரிக் வெற்றி பெறுமா? என்பது அனைவரின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.